***KALAM – International Journal***
***Faculty of Arts and Culture,***
***South Eastern University of Sri Lanka.***
***14(3), 2021***

# மேற்கினதும் இஸ்லாத்தினதும் நோக்கில் மனித ஒழுக்கம்: ஓர் ஒப்பீட்டாய்வு

**Zunoomy M.S.[1] & Munas M.H.A.[2]**
[1] Temporary Assistant Lecturer, South Eastern University of Sri Lanka
[2] Senior Lecturer, South Eastern University of Sri Lanka

Corespondence: zunoomy@seu.ac.lk[1], munas@seu.ac.lk[2]

## ஆய்வுச் சுருக்கம்

மனித வாழ்விற்கு ஒழுக்கம் அவசியமானதொன்றாக காணப்படுகின்றது. இதிலுள்ள ஒழுக்கக் கோட்பாடுகள் மனித வாழ்வின் போக்கை தீர்மானிக்க வழியமைக்கின்றது. குறிப்பாக, ஒவ்வொரு சமூகத்திற்கும் அதன் நம்பிக்கைக் கோட்பாடு, இலட்சிய நோக்கு, வாழ்வியல் என்பவற்றிற்கேற்ப இது வித்தியாசமாக அமையும். இந்தவகையில், மனிதன் மற்றும் ஒழுக்கம் பற்றிய வரையறையில் மேற்கினதும் இஸ்லாத்தினதும் கருத்துக்களைக் கண்டறியும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது ஒப்பீட்டாய்வு முறையியலில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தி இவ்வாய்வு அமைவதால், தரவுகளைப் பெற ஒழுக்கவியல் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், கட்டுரைகள், இணையக் கட்டுரைகள் ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வின் கண்டறிதல்களாகளூ மேற்கினது ஒழுக்கவியல் கோட்பாடுகள் மனிதனால் மனித பகுத்தறிவாலும் சிந்தனையாலும் தோற்றுவிக்கப்பட்டதால் எந்தவொரு ஒழுக்கவியல் கோட்பாடும் வாழ்வியல் ரீதியான கோட்பாடாக செயற்பட்டு முழு மனித சமூகத்திற்கும் பொருத்தமானதொரு கோட்பாடாக உருவாகவில்லை. இதிலிருந்து இஸ்லாமிய கோட்பாடுகள் விதிவிலக்குப் பெறுகின்றது. ஏனெனில், இஸ்லாமிய ஒழுக்கங்கள் மனிதனை சிருʼடித்த படைப்பாளனிடமிருந்து வழங்கப்பட்டவைகளாக உள்ளன என்பதே இன்றுவரை இஸ்லாமிய ஒழுக்கவியல் நிலைத்திருக்க காரணமாக அமைகின்றது. ஏனெனில், மனிதனது நடத்தைகளும், இயக்கங்களும், தொழிற்பாடுகளும் சிக்கலானவையாக இருப்பதால் அவற்றை முறையான கட்டுப்பாட்டுக்குள் அமைத்து நெறிப்படுத்த மார்க்கம், ஒழுக்கம், சட்டம் ஆகிய மூன்று இணைந்து தொழிற்பட வேண்டும். இம்மூன்றில் ஒன்றையோ அல்லது இரண்டையோ செயற்படுத்தினால் கூட அவ்வொழுக்கவியல் வெற்றி பெற முடியாது என்பது நிதர்சனமாகும்.

**திறவுச் சொற்கள்:** மனிதன், ஒழுக்கம், மேற்குலகு, இஸ்லாம், ஒழுக்கவியல்

## அறிமுகம்

இவ்வுலகில் உயர்ந்த படைப்பாக கருதப்படும் மனிதனில் காணப்படுகின்ற ஒழுக்கமே அவனது பெறுமானத்தை பிரஸ்தாபிக்கின்ற அம்சமாக உள்ளது. மனித வாழ்விற்கு ஒழுக்கவியல் அவசியமானதொன்றாக காணப்படுகின்றது. இதிலுள்ள ஒழுக்கக் கோட்பாடுகள் மனித வாழ்வின் போக்கை தீர்மானிக்க வழியமைக்கின்றது (ஜமாஹிர், 2012). இவ்வொழுக்கநெறி இன்றேல் அவனுக்கும் பிற உயிரினங்களுக்கும் இடையில் எவ்வித வேறுபாடும் இல்லாமல் போய்விடும். ஒழுக்கமென்பது உயிரை விட மேலாக கருதப்பட வேண்டும். அவ்வாறு கருதப்படும் போதே அவனால் ஒழுங்காக வாழ்வை வாழ முடியும். தனி மனித வாழ்விலும், குடும்ப, சமூக வாழ்விலும் இவ்வொழுக்கம் அவனது நடத்தைகளில் பிரதிபலிக்க வேண்டும். இத்தோரணையில், இவ்வாய்வானது ஒழுக்கத்தை வரையறை செய்வதில், மனிதன் தொடர்பான மேற்கினதும் இஸ்லாத்தினதும் கருத்துக்களை ஒப்பீடு செய்வதாக அமைகின்றது.

### ஆய்வுப் பிரச்சினை

ஒழுக்கத்தை வரையறை செய்வது தொடர்பான ஆய்வுகள் ஒவ்வொரு காலத்திலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்போது, அக்காலத்தவர்கள் தங்கள் சிந்தனைகளால், அனுபவங்களால், பகுத்தறிவால் பெற்றுக் கொண்ட விடயதானங்களுக்கு ஏற்ப மனித ஒழுக்கத்தை வரையறை செய்வது வரலாறு நெடுகிலும் இடம்பெற்று வந்த விடயமாகும். குறிப்பாக, ஒவ்வொரு சமூகத்திற்கும் அதன் நம்பிக்கைக் கோட்பாடு, இலட்சிய நோக்கு, வாழ்வியல் என்பவற்றிற்கேற்ப இது வித்தியாசமாக அமையும். இந்தவகையில், மனிதனால் வரையறுக்கப்பட்ட மேற்கத்தைய ஒழுக்கம் பற்றிய சிந்தனைக்கும் மனிதனைப் படைத்த இறைவனால் வரையறுக்கப்பட்ட ஒழுக்கம் பற்றிய சிந்தனைக்கும் இடையில் ஒப்பான தன்மைகள் காணப்படுகின்றனவா? எனும் ஆய்வு வினாவே இவ்வாய்வின் பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது.

### ஆய்வு நோக்கம்

மனிதன் மற்றும் ஒழுக்கம் பற்றிய வரையறையில் மேற்கினதும் இஸ்லாத்தினதும் கருத்துக்களை ஒப்பிடுதல்.

### ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது ஒப்பீட்டாய்வு முறையியலில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தி இவ்வாய்வு அமைவதால், தரவுகளைப் பெற ஒழுக்கவியல் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், கட்டுரைகள், இணையக் கட்டுரைகள் ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன.

### கலந்துரையாடல்

### ஒழுக்கம் பற்றிய அறிமுகம்

Ethos (வழக்காறுகள், மரபுகள்) எனும் கிரேக்க சொல்லில் இருந்து தோன்றியதே Ethics (ஒழுக்கங்கள், பண்பாடுகள்) என்பதாகும். ஆரம்ப காலத்தில் மனிதன் ஒன்றாக கூடி வாழ்ந்த போது உருவான பண்பாடுகள், நடத்தைப்பாங்குகளை மையப்படுத்தி உருவாகியதே ஒழுக்கமாகும் (ஜமாஹிர், 2012). இந்தவகையில், ஒழுக்கக் கோட்பாடுகள் சமூகத்திலிருந்து உருவாகுவதால், ஒவ்வொரு சமூகத்திற்கும் அதன் நம்பிக்கைகள், இலட்சியம், வாழ்க்கைநெறி என்பவற்றிற்கேற்ப ஒழுக்கம் பற்றிய கருத்தியல்கள் வேறுபட்டு அமையும் (சுக்ரி 1999). பொதுவாக ஒழுக்கவியல் என்பதற்கு நுவாஐஉள என்ற சொல்லும் ஒழுக்கம் என்பதற்கு Morality என்ற ஆங்கிலச் சொல்லும் பயன்படுத்தப்படுகின்றது. அறபு மொழியில் Adhab, Akhlaque ஆகிய சொற்பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இக்கண்ணோட்டத்தில், ஒழுக்கவியல் என்பது விஞ்ஞான ரீதியாக கற்கப்படும் ஒரு கலையாகும். அக்கலையில் ஆராயப்படும் ஒரு விடயதானமே ஒழுக்கமாகும் என ஒழுக்கவியல் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பை அடையாளப்படுத்தலாம் (ஜமாஹிர், 2012). மனித வாழ்விற்கு ஒழுக்கவியல் அவசியமானதொன்றாக காணப்படுகின்றது. இதிலுள்ள ஒழுக்கக் கோட்பாடுகள் மனித வாழ்வின் போக்கை தீர்மானிக்க வழியமைக்கின்றது. அதேநேரத்தில் மனிதனிடத்தில் ஒழுக்கமில்லாத போது அவனின் நடத்தைகள் நெறிபிறழ்ந்தனவாகவும், இலக்கில்லாத அமைப்பிலும் காணப்படும். இவ்வாறு செயற்படும் ஒரு மனிதனால் குறித்ததொரு இலக்கை நோக்கி வெற்றிகரமாக முன்னேறிச்செல்வது சாத்தியமற்ற விடயமாக காணப்படுகின்றது. மறுபுறம், அறிவார்ந்த ஒழுக்க நெறியைப் பின்பற்றும் போது ஒரு மனிதனின் பெறுமானங்களையும் குறிக்கோள்களையும் அடைந்து கொள்ள முடிவதுடன் ஒழுங்கான நடத்தையை வாழ்வில் நடைமுறைப்படுத்தவும் முடியுமாக இருக்கும் என கலாநிதி பீ.எம். ஜமாஹிர் (2012) பிரஸ்தாபிக்கின்றார்.

இந்தவகையில், வாழ்வின் முக்கிய பங்கு வகிக்கும் ஒழுக்கத்தை வரையறை செய்வதில், மனிதன் தொடர்பான மேற்கினதும் இஸ்லாத்தினதும் கருத்துக்களை ஒப்பு நோக்கும் போது ஒரு மனிதனின் ஒழுக்கம் எவ்வாறு விடயங்களில் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதை அறிந்து கொள்ள முடியும். இதனடிப்படையில், ஒழுக்கத்தை வரையறை செய்வதில் இவ்விரண்டினதும் கருத்துக்களை தனித்தனியாக கலந்துரையாடிய பின்னர் அவற்றின் கருத்துக்களை ஒப்பு நோக்குவதன் மூலம் சிறந்த தெளிவினை பெற்றுக் கொள்ள முடியும்.

## மனிதன் பற்றிய மேற்கின் கருத்துக்கள்

ஒழுக்கம் பற்றி ஒவ்வொரு காலப்பிரிவிலும் தத்துவஞானிகள், சிந்தனையாளர்கள் தங்களது அனுபவத்தின் மூலமான பகுத்தறிவின் அடிப்படையில் பல்வேறு வகையிலும் ஒழுக்கத்தை வரையறை செய்துள்ளனர்.

ஒழுக்கத்தின் ஆசான்கள் என வர்ணிக்கப்படும் சோபிஸ்டுகளில் இருந்த முக்கியமானவரான புரோட்டகோரஸ் "மனிதனே அனைத்திற்குமான அளவுகோல்" எனப் பிரகடனப்படுத்தினார். இயல்பிலேயே கோட்பாட்டின் பெறுமானத்தை மனிதனே தீர்மானிக்கிறான். அவனுக்கு அதற்கான ஆற்றல் வழங்கப்பட்டுள்ளது (இராதாகிருஷ்ணன், 1979).

சோக்ரடிஸ் என்பவர், ஒழுக்கம் என்பது ஒருவரது விருப்பு வெறுப்புப்படி நடப்பதல்ல. மாறாக, மனிதன் தனது பகுத்தறிவினால் சிந்தித்து நன்மை எது? தீமை எது? எனப் புரிந்து அதன்படி செயற்படுவதே ஆகும். இதன்போது சிந்தனை தெளிவாக இருத்தல் வேண்டும். உணர்ச்சிகளுக்கு உட்பட்டு செயற்பட முடியாது. பிற மனிதர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதற்காகவோ அல்லது பொதுமக்களின் விருப்பப்படியோ மனிதன் செயற்படக் கூடாது. ஒவ்வொரு மனிதனும் அவரவர் சிந்தித்து நடத்தைகளில் ஈடுபட வேண்டும் என்கிறார் (அனஸ், 2003).

பிளேட்டோவின் கருத்தின் படி, நல்ல ஒழுக்கமுள்ள மனிதனை உருவாக்க சிறந்த அரசியல் அமைப்பும், நல்லாட்சியும் அவசியமாகும். இதன்போது அவனது அறிவு, வீரம், உணர்ச்சி கவனத்திற் கொள்ளப்படும். இந்தவகையில், தனி மனிதன் உண்மையாளனாகவும் ஒழுக்கமுள்ளவனாகவும் இருக்கும் வரை சமூகம் உண்மையுள்ளதாக ஒழுக்கமுள்ளதாக இருக்கும். மனிதனுக்கு இன்பம் தருவதே ஒழுக்கம் என்ற சோபிஸ்டுகளின் கருத்தை மறுப்பவராக இவர் உள்ளார். அவ்வாறே, கலை இலக்கியங்கள் கூட மனிதனின் மோசமான உணர்ச்சிகளுக்கு உந்துதலாக அமையக் கூடாது என வலியுறுத்துகின்றார். இவரின் கருத்துப்படி, ஆன்மாவின் மிக உன்னத உயர்ந்த பாகம் அறிவாகும். இந்த அறிவானது மனித நடத்தைகளுக்கு வழிகாட்டியாக இருக்கின்றது. இந்த அறிவு சுதந்திரமாக செயற்படுவதுடன் நிலையாக காணப்படக் கூடியதாகும் (அனஸ், 2003). இந்தவகையில் மனிதனின் ஒழுக்கத்தில் பகுத்தறிவு, உணர்ச்சிகள், விருப்புகள் ஆகிய மூன்றும் தாக்கம் செலுத்துகின்றன என பிளேட்டோ குறிப்பிடுகின்றார். மனிதர்களுக்கிடையில் வகுப்பு வேறுபாட்டை உருவாக்குவதன் மூலமே ஒரு சமூகத்தில் தன்னிறைவு, ஒழுங்கு, அமைதி பேணப்படும் என்ற சிந்தனையில் ஒழுக்கத்தை அளவீடு செய்கின்றார்.

கிரேக்க மெய்யியலாளர்களில் உயர்ந்த தரத்தில் வைத்து பார்க்கப்படுபவரான அரிஸ்டோட்டில் தனி மனித முக்கியத்துவத்தினை வலியுறுத்தும் இவர், "மனிதன் மகிழ்ச்சியுடனும் களிப்புடனும் வாழத் துணைபுரிவதே ஒழுக்கம்" என மனித ஒழுக்கத்தை வரைவிலக்கப்படுத்துகின்றார். மனிதன் மகிழ்ச்சியைப் பெறுவதற்கு உதவுகின்ற காரணியாக ஒழுக்கத்தை இவர் கருதுகின்றார். இந்தவகையில், மனித நடத்தைகளின் இறுதி இலக்கு நன்மை அடைவதாக கருதுகின்றார். இவரின் கருத்துப்படி, ஒரு மனிதனில் ஒழுக்கம் பிறப்பால் உண்டாகின்றது. பயிற்சி பெறுவதால் விருத்தியடைகின்றது. சூழ்நிலைக்கேற்ப பொருத்தமான ஒழுக்கத்தை தேர்ந்தெடுப்பதாகும் என மனித ஒழுக்கத்தை விளங்கப்படுத்துகின்றார். ஒரு மனிதனில் வாழ்வில் வழமையாக செயற்பாடாக ஒழுக்கம் காணப்பட வேண்டும் என்பது இவரது நிலைப்பாடாகும். இதன்போது, அவனது தீர்மானங்கள் உணர்ச்சிகளால் அதாவது தனிப்பட்ட விருப்பு,

வெறுப்புகளால் தீர்மானிக்கப்படாமல் பகுத்தறிவால் சிந்தித்து முடிவுகளை பெற வேண்டுமென கூறுகின்றார் என கலாநிதி பீ.எம். ஜமாஹிர் தனது நூலில் குறிப்பிடுகின்றார்.

மனிதன் சூழ்நிலைக்கேற்றாற்போல் ஒரு விடயத்தில் நடுத்தரத்தை தேர்ந்தெடுக்கிறான். இதனை அவன் தனது பகுத்தறிவின் மூலம் மேற்கொள்கின்றான். இவ்வாறு அவன் தேர்வு செய்வதற்கு தனது அறிவைப் பயன்படுத்தி சிந்தித்து தம் ஆற்றலுக்கு உட்பட்ட வகையில் பொருட்கள் மீது கொள்ளும் விருப்பமாகும். இதன்போது அவனுக்கு சுதந்திரம் வழங்கப்படுகின்றது. அவன் தேர்வு செய்ததைத் தொடர்ந்து செயற்படுவாயின் அவ்விடயம் அவனது பழக்கமாக மாறிவிடும். இவ்வாறு வழக்கமாக மாறுகின்ற விடயமே ஒழுக்கம் ஆகும் (நாராயணன், 2003). இவரின்படி, மனிதன் செய்கின்ற வழக்கமான செயற்பாடுகள் மாத்திரமே ஒழுக்கமாக கருதப்படும். இந்தவகையில், இரு விடயங்களுக்கு இடையில் நடுவில் காணப்படுவதை பகுத்தறிவால் தேர்ந்தெடுப்பதே ஒழுக்கமாகும். அதியுயர் நிலைக்கும் மிகத் தாழ்நிலைக்கும் இடையில் மத்திய பாதை பேணப்பட வேண்டும் என்பது ஒழுக்கத்தை வரையறை செய்வதில் இவரின் விளக்கமாகும் (ஜமாஹிர், 2012).

ஆகவே, மனிதன் தனக்குரிய பொருத்தமான தொழிற்பாடுகளின் மூலம் பிற உயிரினங்களில் இருந்து வேறுபடுகின்றான். இது அறிவுரீதியான அவனது ஆன்மீக செயற்பாடாக அமையப் பெறுகின்றது. அந்த ஒழுக்கத்திற்கேற்ப ஆன்மாவின் நடவடிக்கை முழு வாழ்க்கைக்குமான செயற்பாடாக அமைந்துவிடுகின்றது எனலாம். மேலும், இவர் மனிதனின் ஒழுக்கத்துக்கான உறவை பகுத்தறிவிற்கும் மகிழ்ச்சிக்கும் இடையில் இணக்கம் காண்பதன் மூலம் வெளிப்படுத்த முயல்கின்றார் எனலாம்.

குறிப்பாக, இவர் அறிவின் ஆணைக்கேற்ப மனிதன் செயல்படுவதையே நற்பண்பென கருதுகின்றார். வாழ்வில் மகிழ்ச்சியைப் பெற நல்லறிவும் ஒழுக்கமும் அவசியம் என்கிறார். ஆக, கல்வி மற்றும் அரசியல் மூலமே இதனை அடைந்துகொள்ள முடியுமென கருதுகின்றார் (நாராயணன், 2003).

சார்பியல் கோட்பாட்டை முன்வைத்த ஸ்பினோஸா என்பவர் ‘‘செல்வமோ, புகழோ, புலன் இன்பங்களோ மனிதனுக்கு இணங்கிய வகையில் அவனுக்குச் சாதகமாக அமைந்தால் அவை நன்மையானவை எனவும், அவனுக்குப் பாதகமாக அமைந்தால் அவை தீமையானவை எனவும்’’ குறிப்பிட்டார்.

பயனுடைமை அடிப்படையை தோற்றுவித்த ஜெரேமி பென்தாம், ஜோன் ஸ்டுவார்ட் மில் ஆகியோர், ‘‘சமூகத்தில் பெரும்பான்மையினருக்கு பெரியளவிலான மகிழ்ச்சியையும் சந்தோ‘த்தையும் அளிப்பவைகளே நன்மையானவை’’ என்றனர்.

லோகே என்பவரின் கருத்தின்படி, ‘‘நன்மையும் தீமையும் மகிழ்ச்சியோடும் துன்பத்தோடும் தொடர்புடையவை. நன்மையானது மனிதனின் மகிழ்ச்சியை அதிகரித்து அவனது துன்பம், கவலை, நோவினையை குறைப்பதாகும்’’ என்கின்றார்.

கான்ட் என்பவர் மத, பௌதீக் தத்துவங்களில் இருந்து விடுபட்டு ‘‘எல்லா ஒழுக்கக் கோட்பாடுகளின் மூலமும் அடிப்படையும் பகுத்தறிவே’’ எனக் கூறினார்.

நீட்சே என்பவர் ‘‘மனிதனின் அதிகார பலத்தை வளர்க்க எது துணைபுரிகின்றதோ அதுவே ஒழுக்கமாகும்’’ என முன்மொழிந்தார் (சுக்ரி, 1999).

கால்மார்க்ஸ் தனது மாக்ஸிய கோட்பாட்டின் படி, ஒழுக்கத்தை பொருளியல் முயற்சிகளோடு தொடர்புபடுத்துகின்றார். காலமாற்றத்திற்கு ஏற்ப ஒழுக்க கோட்பாடுகளும் மாற்றமடைக் கூடியது

என்ற கருத்தை தெரிவித்தார். அத்தோடு, பொருளாதார அடைவுகளே மனிதனின் ஒழுக்கத்தை வரையறுப்பதில் பெரும் பங்காற்றுகின்றது (நாராயணன், 2003)

இக்கோட்பாடுகளை வைத்து நோக்கும் போது, மனிதனில் சிந்தனையாலும் பகுத்தறிவாலும் தோற்றுவிக்கப்பட்ட ஒழுக்கம் பற்றிய கருத்துக்கள் முழு மனித சமூகத்திற்கும் பொருந்துவதாக அமைவதாகவும் அவர்களின் வாழ்வில் நிலையான இடத்தைப் பெறுவதாகவும் மேற்கத்தையவர்கள் கருதுகின்றனர்.

சுருங்கக்கூறின், மனிதனே அனைத்தினதும் அடிப்படையாக உள்ளான், அவனுடைய மகிழ்ச்சியே உயர் இலக்காகக் கொள்ளப்படுகின்றது, மனிதன் இயந்திரத்திற்கு ஒப்பாக கருதப்பட்டு அவனின் மூலம் பெற முடியுமான அனைத்தையும் பெற்ற பின் அவனை புறமொதுக்குவதே சமூக நீதியாக கருதப்படுகின்றதுளூ பிரதானமாக மனிதனின் பகுத்தறிவே அவனையும் அவனது வாழ்வையும் செயற்படுத்துகின்ற தலையாய கருவியாக இருக்கின்றதுளூ அதிகாரம் பெறுகின்ற போதே மனிதன் ஒழுக்கம் பெறுகின்றான்ளூ பொருளாதார அடைவுகளை மனித ஒழுக்கத்தை வெளிப்படுத்துகின்றது போன்றன மனிதன் பற்றிய மேற்கினது கோட்பாடுகளுள் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

## மனிதன் பற்றிய இஸ்லாத்தின் கருத்துக்கள்

இஸ்லாத்தில் ஒழுக்கவியல் இறைத்தூதின் அடியாக கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அத்தோடு சர்வதேசத் தன்மை வாய்ந்ததாகவும் காலமாற்றத்திற்கேற்ப மாற்றமடையாத நிலையான தன்மைகளின் மீது கொண்டமைந்ததாகும். மனிதனின் செயற்பாடு சரியானதா? தவறானதா? அல்லது நல்லதா? கேட்டதா? என்ற வினாக்களோடு தொடர்புடைய விடயமே ஒழுக்கமாக கருதப்படுகின்றது (சுக்ரி, 1999). இஸ்லாமிய ஒழுக்கவியல் கோட்பாட்டில் மனிதன், பிரபஞ்சம், வாழ்வு ஆகிய மூன்றும் பரஸ்பர தொடர்பைக் கொண்டிருக்கின்றன. ஏனெனில் பிரபஞ்ச உருவாக்கத்தில் பிரதான நோக்கமாக மனிதனும் அவனது வாழ்வுமே காணப்படுகின்றன. இவ்வுலக உருவாக்கத்தைப் பற்றி அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.

“வானங்களையும், பூமியையும் அல்லாஹ் தக்க காரணத்தின் மீதே சிரு‘டித்திருக்கிறான். ஆகவே, (அவைகளிலுள்ள) எல்லா ஆத்மாக்களும் அவை தேடிக்கொண்ட வினைக்குத் தக்க கூலியே கொடுக்கப்படும். அவை (அணுவளவும்) அநியாயம் செய்யப்படமாட்டாது.” (ஸூறா அல்ஜாஸியா: 22)

அடுத்து, இஸ்லாமிய நோக்கில் மனிதனாவன் அல்லாஹ்வின் பிரதிநிதியாவான். இதனடியாக, அவன் உயர்ந்த படைப்பாக அல்லாஹ்வினால் பிரஸ்தாபிக்கப்படுகின்றான்.

“அந்த நேரத்தை நினைவுகூறும். உம் இறைவன் மலக்குமார்களை நோக்கி பூமியில் நான் எனது பிரதிநிதியை படைக்கப் போகின்றேன் என்று கூறினான். (அப்போது) அவர்கள் பூமியில் அதன் ஒழுங்கமைப்பைச் சீர்குலைத்து மேலும் இரத்தம் சிந்தக் கூடியவரையா அதில் (பிரதிநிதியாக) நீ ஏற்படுத்தப் போகின்றாய்? நாங்கள் தாம் உன்னைப் புகழ்ந்து துதிபாடி உன் தூய்மையைப் போற்றிக் கொண்டிருக்கிறோமே என வினவினார்கள் (அப்போது இறைவன்) நீங்கள் அறியாதவற்றையெல்லாம் நான் அறிவேன் என்று கூறினான்.” (அல்பகறா: 30)

“நிச்சயமாக நாம் அமானிதத்தை சுமந்துகொள்ளுமாறு வானங்கள், பூமி, மலைகள் ஆகியவற்றிடம் எடுத்துக் காட்டினோம். அப்போது, அதைச் சுமந்து கொள்வதில் இருந்து அவை விலகிக் கொண்டன. இன்னும் அதைச் சுமப்பதில் இருந்து அவை அஞ்சின. ஆனால் மனிதனோ அதைச் சுமந்து கொண்டான்…” (அல்அஹ்ஸாப்: 72)

இந்தவகையில், மனிதன் அல்லாஹ்வின் பொறுப்பைச் சுமந்துகொண்டான். இதனால், அல்லாஹ் மனிதனுக்கு சுஜுது செய்யும்படி மலக்குகளிடம் கட்டளையிட்டான் (மஸாஹிர் மற்றும் பேகம், 2017). இதனடியாக, மனிதன் சுஜுது செய்யப்பட்டவன் என்ற நாமத்தையும் பெற்றுக்கொள்கின்றான்.

“மலக்குகள் அனைவரும் சுஜுது செய்தார்கள்ளூ இப்லீஸைத் தவிர.” (அல்ஹிஜ்ர்: 30,31)

இவ்வாறு மனிதனைப் படைத்த அல்லாஹ் அவனுக்கு செயற் சுதந்திரத்தை கொடுத்தான். இந்த செயற் சுதந்திரமும் அவனது சிந்தனையும் இறைக் கட்டளைகளுக்கு ஒருங்கிணைந்தவாறு செல்ல வேண்டும் என்பது இஸ்லாத்தில் வழிகாட்டலாகும். இங்கு இறை வழிகாட்டலே பிரதான இடத்தை வகிக்கின்றது எனலாம். இறைச் சட்டங்களுக்கு உட்பட்டு செயற்படும் போது அச்செயல்களும் சிந்தனைகளும் நன்மையானதாக மாறுகின்ற அதேநேரம் புறம்பாக செயற்படுகின்ற போது தீமையாக மாறும் என்பது இஸ்லாமிய ஒழுக்கவியலாகும் (சுக்ரி, 1999).

‘அல்லாஹ் சில விடயங்களைக் கட்டளையிட்டுள்ளான்ளூ அவற்றை மீறாதீர்கள். அவன் சில எல்லைக் கோடுகளை வகுத்துள்ளான்ளூ அவற்றைத் தாண்டி விடாதீர்கள். அவன் சில விடயங்கள் பற்றி, எதுவும் கூறாமல் மௌனமாக இருந்துள்ளான்ளூ இது உங்கள்பால் கருணை கொண்டேயாகும். எனவே, இவற்றைப் பற்றிக் கேட்காதீர்கள்.’ (இப்னு கையூம்)

அத்தோடு, பொறுப்புக்களையும் வழங்கினான். இந்த பொறுப்புக்களை வீணாக்காமல் அவன் நிறைவேற்றுகின்ற போதே அதற்குரிய பலனை மறுமையில் பெற்றுக் கொள்ள முடியும்.

“யார் அணுவளவு நன்மை செய்கிறாரோ அவர் அதன் பலனை கண்டு கொள்வார். யார் அணுவளவு தீமை செய்கிறாரோ அவர் அதன் பலனைக் கண்டு கொள்வார்.” (அஸ்ஸில்ஸால்: 7-8)

அல்லாஹ்வினால் படைக்கப்பட்ட பொருட்களில் உடல், அறிவு, ஆன்மா போன்ற பண்புகளைக் கொண்டவனாகவே மனிதன் திகழ்கின்றான். இம்மூன்றையும் பயன்படுத்தி அவன் அல்லாஹ்வின் பிரதிநிதி என்றவகையில் அவனுக்கு கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டுமென்பது இஸ்லாமிய ஒழுக்கவியலின் பிரதான அம்சமாக காணப்படுகின்றது (அக்ரம், 2001).

மனிதனின் நடத்தைகள் அனைத்தினதும் அளவுகோலாக இறைசட்டமே காணப்படுகின்றது. இறைசட்டங்களை மீறி மனிதனால் செயற்பட முடியாது. அதற்காக இவ்வுலகம் படைக்கப்படவில்லை. மாறாக, ஒழுக்கப் பயிற்சிக்காவே படைக்கப்பட்டுள்ளது.

“……. உங்களில் நற்கருமங்கள் செய்வோர் யார் என்று உங்களைப் பரிசோதிக்கும் பொருட்டு (உங்களையும், இவற்றையும் அவன் படைத்தான். நபியே! நீர் மனிதர்களை நோக்கி) நீங்கள் இறந்த பின்னர் “நிச்சயமாக (உயிர்கொடுத்து) எழுப்பப்படுவீர்கள்” என்று கூறினால், அதற்கு (அவர்களிலுள்ள) நிராகரிப்போர் ‘இது பகிரங்கமான சூனியமேயன்றி வேறில்லை’, என்று கூறுகின்றனர்.” (ஹுது: 7)

நல்ல ஒழுக்கத்தை மாத்திரமே விரும்புவது மனிதனின் இயல்போடு இயைந்த ஒன்றாகும். ஆனால் அவன் நல்லதை மட்டுமே செய்வான் எனப் புரியப்படக் கூடாது. மனிதன் நல்லதை அதிகமாக செய்யும் போது அவனது இயல்பு திருப்தி அடைகின்றது (கஸ்ஸாலி, 2009). இதன்போது அவன் நல்லதை தெரிவுசெய்ய தனது பகுத்தறிவைப் பயன்டுத்த வேண்டும். ஏனெனில் நன்மை அல்லாஹ்வால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது போலவே தீமையும் அவனாலேயே நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

“எவர்கள் நம்முடைய வழியில் (செல்ல) முயற்சிக்கின்றார்களோ அவர்களை, நிச்சயமாக நாம் நம்முடைய (நேரான) வழியில் செலுத்துகின்றோம்.” (அல்அன்கபூத்: 69)

மேற்கூறப்பட்ட விடயங்களை வைத்து நோக்கும் போது, மனிதன் இஸ்லாமிய மார்க்கத்தை விட்டு பிரிந்துசெல்லாத அமைப்பில் இஸ்லாமிய ஒழுக்கவியல் கோட்பாடு காணப்படுகின்றது. இதற்குப் பிரதான காரணமாக, இஸ்லாமிய ஒழுக்கவியல் இறைத்தூதின் அடிப்படையில் கட்டியெழுப்பட்டுள்ளதை கூற முடியும். ஒரு மனிதன் பகுத்தறிவுடையவனான காணப்பட்டாலும், அவன் தனது பண்பாட்டாலும் சீரிய பழக்கவழக்கங்களாலுமே உயர்வைப் பெறுவதால் இஸ்லாம், ஒழுக்கவியலை பெரும் பண்பாடாக மட்டுமன்றி இறைவிசுவாசத்தின் அங்கமாகவும் கருதுகின்றது. இதிலிருந்து பண்பாடு இன்றி இறைவிசுவாசம் பூரணமடையாது என்பதை புரிந்து கொள்ள முடிகின்றது. அத்துடன், ஒழுக்கக்கேடாக நடந்துகொள்வது இறைவிசுவாசத்தில் பின்னடைவை ஏற்படுத்திவிடும் என்கிற அளவுக்கு இஸ்லாம் ஒழுக்கத்தை வலியுறுத்தியிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

அடுத்து, மனிதன் பற்றிய இஸ்லாத்தின் பார்வை மிகப் பரந்ததாகும். இமாம் கஸ்ஸாலி அவர்கள் தனது நூலான ‘இஹ்யாஉ உலூமித்தீன்’ இல் குறிப்பிடும் போது, ‘‘மனிதன் இயற்கையாகவே தனது தேவைகளுக்காகப் பிறரில் தங்கி நிற்கும் நிலையிலேயே படைக்கப்பட்டுள்ளான். அதாவது, மனிதன் என்பவர் தனித்துநின்று வாழ முடியாது. பிறரில் அல்லது பிற பொருட்களின் சார்ந்திருக்க வேண்டிய தேவையுள்ளது.

நம்பிக்கை, அன்பு, அடிபணிதல், வழிப்படல், அஞ்சுதல் போன்றவற்றின் மூலம் மனிதனுக்கும் அல்லாஹ்வுக்கும் இடையேயுள்ள தொடர்புகள்,

அன்பு காட்டுதல், உரிமைகளை மதித்தல், உதவிசெய்தல், நல்லிணக்கமாக செயற்படுதல் ஆகியவற்றின் மூலம் மனிதனுக்கும் பிற மனிதர்களுக்கும் இடையிலான உறவுகள்,

பாதுகாத்தல், பராமரித்தல், அவதானித்தல், ரசித்தல் மூலமாக மனிதனுக்கும் சூழலுக்கும் இடையிலான தொடர்புகள் என மனித ஒழுக்கப் பண்புகள் பல்வேறு அம்சங்களோடு சார்ந்திருப்பதாக அமைவதனை இஸ்லாம் எடுத்துக் காட்டுகின்றது (சுக்ரி, 1999).

இந்தவகையில், மனிதனானவன் சமூகப் பிராணியாவாக கருதப்படுகின்றான். அவனிலிருந்து சமூகம் பயனடைவதைப் போன்று, சமூகத்திலிருந்து மனிதன் பயன்பெறுவது இயற்கை நியதியாகும். இதனைப் புறந்தள்ளி விட்டு தனியாக வாழ்வதனை இஸ்லாம் அங்கீகரிப்பதில்லை.

சுருக்கமாக, மனிதனுக்கு இஸ்லாம் திட்டவட்டமான நெறிமுறைகளை வகுத்திருக்கின்றது. மார்க்கக் கடமைகளைப் பேணுதல், ஒழுக்கம், பண்பாடு, குடும்ப உறவு, சமூக, பொருளாதார விவகாரங்கள், நிர்வாகம், பிற மனிதர்களுடைய உரிமைகள், நீதி, சமாதானம், சர்வதேசத் தொடர்புகள் ஆகிய அனைத்து அம்சங்களிலும் இந்த நெறிமுறை காணப்படுகின்றது. அதாவது, மனித வாழ்வின் அனைத்து துறைகளையும் இஸ்லாம் கவனத்திற் கொண்டுள்ளது. நல்லவை, கெட்டவை எவை, தீங்கானது, கெடுதியானது எவை, போற்றிப் பேணி வளர்க்க வேண்டிய நல்லொழுக்கங்கள் எவை, தன்னை காத்துக்கொள்ள வேண்டிய தீய ஒழுக்கங்கள் எவை போன்ற மனித வாழ்வின் அனைத்து விடயங்களையும் இஸ்லாமிய ஒழுக்கவியல் விளங்கியிருக்கின்றது (மௌதூதி, 1989).

இந்தவகையில், நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல், பெரியோரை மதித்தல், சிறியோருக்கு இரக்கம் காட்டுதல், உண்மை உரைத்தல், வாய்மை காத்தல், கற்புப் பேணல், மக்கள் மீதான அன்பு, அயலவர் உரிமை பேணல், உதவி செய்தல், கட்டுப்பாடு, புலனடக்கம், ஜீவகாருண்யம், இயற்கையை பராமரித்தல் போன்ற தனிமனித வாழ்வோடு தொடர்புபடுகின்ற அனைத்து விடயங்களையும் இஸ்லாமிய ஒழுக்கவியல் உள்ளடக்கி இருக்கின்றது. இவ்வாறான பண்புகள் மூலம் மனிதனில் உடலாரோக்கியம், அன்பு, பாசம், சுத்தம், மனஅமைதி, கற்பொழுக்கம், பிறர்நலன் காத்தல், பரஸ்பர ஒத்துழைப்பு, மன்னிப்பு, சகிப்புத்தன்மை, நடுநிலைமை, அமானிதம், கலந்தாலோசனை, சமூக எழுச்சி போன்ற ஒழுக்கப் பண்புகள் ஏற்பட வேண்டுமென இஸ்லாம் எதிர்பார்க்கின்றது.

## மனிதன் பற்றிய மேற்கினதும் இஸ்லாத்தினதும் கருத்துக்களின் ஒப்பீடு

மனிதன் பற்றிய மேற்கின் கருத்தின்படி, மனிதனே அனைத்துமாகும். அவன் பகுத்தறிவு கொண்டிருப்பதால் அவனை மிக உயர்வானவனாக கருதுகின்றது. எனினும், பகுத்தறிவை மாத்திரம் பெற்றிருப்பது உயர் அந்தஸ்திற்கு தகுதியுடையவனாக அவனை மாற்றமாட்டாது. இந்த பகுத்தறிவைக் கொண்டு நல்லதையும், தீமையையும் பிரித்தறிந்து அதற்கு ஏற்றாற்போல் வாழும் போதே அவனது வாழ்வு சிறந்து விளங்க முடியும் என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும். இதனை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

“திடமாக, நாம் மனிதனை மிகவும் அழகிய அமைப்பில் படைத்தோம். பின்னர் (அவன் செயல்களின் காரணமாக) அவனைத் தாழ்ந்தவர்களில் மிக்க தாழ்ந்தவனாக்கினோம். எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்தார்களோ அவர்களுக்கு என்றும் முடிவில்லாத (நற்)கூலியுண்டு.” (அத்தீன்: 4-6)

அதேநேரம், மேற்கின் கருத்துப்படி, பகுத்தறிவு பெற்ற அனைவரும் உயர்ந்தவர்கள் எனில், பெரும்பாவிகளும் நிராகரிப்பாளர்களும் இந்த குழுமத்தில் இணைந்து கொள்வதனால் சமூக குழப்பங்கள் ஏற்படலாம்.

இஸ்லாமானது பகுத்தறிவை மாத்திரம் மனிதனுக்கான ஒழுக்கமாக கருதவில்லை. மாறாக, உறுதியான நம்பிக்கையுடன் (ஈமான்) கூடிய ஒழுக்கமே உயர்வைத் தருவதாக அமைகின்றது.

ஒழுக்கத்தை வரையறை செய்வதில் மனிதனின் உளவியல் விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படும்போதே, அவை நிலையான மாற்றங்களை மனிதனில் ஏற்படுத்தும். இந்தவகையில், முஹம்மத் உமர் அத்தீன் குறிப்பிடும் போது, இன்ப துன்ப நடுநிலைக் கோட்பாட்டைக் கொண்டிருந்த, அதாவது கடும் தன்னடக்கத்தை வலியுறுத்திய பண்டைய கிரேக்கத் தத்துவவாதிகளான ஸ்டொக்குகள் துறவுக் கோட்பாட்டை வலியுறுத்திய துறவு நிலை சார்ந்தோர் ஆகியோரின் ஒழுக்கக் கோட்பாடுகள் தோல்வியடைய மூல காரணம், அவை மனித உளவியல் பற்றி தவறான கருத்துக்களைக் கொண்டிருந்ததாகும். உதாரணமாக, மனிதன் அடிப்படையிலேயே பகுத்தறிவுடைய படைப்பினமென்றும் அவனில் எத்தகைய மிருகப் பண்பும் காணப்படவில்லை என்றும் கருதிய அவர்களது கோட்பாட்டைக் குறிப்பிடலாம். அதற்கு எதிராக அமைந்திருந்த சிற்றின்பக் கோட்பாடான எபிகூரியன்ஸ் ஒழுக்கக் கோட்பாடு தோல்வி காண முக்கிய காரணம், அவர்கள் மனிதனின் மிருகப் பண்பை மட்டும் ஏற்றுக் கொண்டு அவனது பகுத்தறிவுத் தன்மையை நிராகரித்ததாகும் என்றார் (சுக்ரி, 1999).

உணர்வுகளாலும் ஆசைகளாலும் தூண்டப்பட்டு மனிதன் தன் சிந்தனையாலும் பகுத்தறிவாலும் உருவாகி, மனிதனின் பௌதீகத் தேவைகளை பெற்று மகிழ்ச்சி பெறுவதனை ஒழுக்கமாக கருதுகின்ற மேற்கின் ஒழுக்கவியல் சிந்தனையானது, இஸ்லாமிய ஒழுக்கவியலுக்கு நேர்பாடாக ஒருபோதும் அமைய முடியாது. இதனை கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி அவர்கள் தனது நூலில் அன்டர்ஸனின் மேற்கோளுடன் குறிப்பிடும் போது, ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரையில், மனிதனின் ஒவ்வொரு செயலிலும் ஒழுக்கப் பண்பு பொதிந்துள்ளது. இது ‘ஹுஸ்ன்’ எனும் அழகானதாகவோ அல்லது ‘கபீஹ்’ எனும் அவலட்சணமானதாகவோ அமையலாம். ஆனால் இந்த ஒழுக்கப் பண்பு மனிதனின் பகுத்தறிவின் அவதானத்திற்கும் பரிசீலனைக்கும் உட்படாததாகும். இத்துறையில் மனிதன் பரிபூரணமாக இறைத்தூதிலும் இறைவழிகாட்டலிலும் தங்கியிருக்க வேண்டியுள்ளது.

நல்ல அரசியல் அமைப்பின்றி, நல்லாட்சியின் துணையின்றி நல்ல மனிதனை உருவாக்க முடியாது என பிளேட்டோ கூறுவதன் மூலம் மனித வாழ்வின் நோக்கம் அரசியல், ஆட்சியாக அமைய வேண்டுமென்ற எதிர்பார்ப்பாகும். ஆனால், இஸ்லாத்தில் அரசியல் மனித வாழ்வின் ஒரு பகுதியாகவே கருதப்படுகின்றது.

மேற்கத்தையர்களினது சிந்தனைகளின் படி, ஒழுக்கத்தை உருவாக்கும் மதமானது மகிழ்ச்சியையும் அதிகாரத்தையும் பெறுவதற்கு உதவுகின்ற சாதனமாக கருதுகின்றன. மதத்தின் மூலம் கூறப்படும் விடயங்களாயினும் அவற்றை பகுத்தறிவு கொண்டு கேள்வி எழுப்பி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆக, சோக்ரடிஸின் படி அறிவினால் ஒழுக்கம் வரையறை செய்யப்படுகின்றது என்ற கருத்தைக் கொண்டிருந்தார். அதேநேரம், இஸ்லாமானது மனிதனின் ஒழுக்க விழுமியங்களை அடைய உதவும் சாதனமாக மதத்தைக் கருதுகின்றது. இதனடியாக, இஸ்லாமிய கோட்பாடானது இறை திருப்தியையும் இம்மை-மறுமை வெற்றியையும் அடையத் துணைபுரியும் அம்சமாகக் காணப்படுகின்றது. மேற்கின் கருத்துப்படி, நிபந்தனைகளற்ற தெய்வீக் அறிவிலிருந்தே நன்மை தோற்றம் பெறுகின்றது. இதனால் பகுத்தறிவு அதனுடன் பூரணமாக உடன்பட வேண்டும் என்கிறது. இஸ்லாத்தின் பார்வையில் வஹீ அறிவு முதன்மையானது. அதில் அக்ல் எனும் அறிவையும் அது ஏற்றுக் கொள்ளவே செய்கின்றது. இருப்பினும் அக்ல் அங்கீகரித்தால் மட்டுமே அறிவு அங்கீகாரம் பெறும் என்பது இஸ்லாத்தின் கருத்தல்ல என்கிறார்கள்.

நாளாந்த வாழ்வுடன் சம்பந்தப்படாத தனிநபர்களோடு தொடர்புபடுகின்ற ஒரு விடயமாக சமய நம்பிக்கையை மேற்கு கருதுகின்றது. இஸ்லாமானது ஈமானும் ஒழுக்கமும் மிக நெருங்கிய தொடர்புடையதாகவும் பண்பாடுகளில் பலவீனம் ஏற்படுவது ஈமானில் பலவீனம் ஏற்படுவதாக கருதுகின்றது.

மேற்கினது சிந்தனையின்படி, மனித வாழ்க்கை வாழ்வதற்கே என்றவகையில் தான் விரும்பியவாறு வாழ்ந்துவிட்டுச் செல்லலாம் என்ற போக்கினை கொண்டுள்ளது. இவ்வுலகமே அவர்களின் இறுதி இலக்காக உள்ளது. மாறாக, இஸ்லாமானது மறுமை ஒன்றை இலக்காகக் கொண்டு அமைந்துள்ளது. இவ்வுலகமானது மறுமையில் வெற்றிபெறுவதற்கான பயிற்சிக் களம் எனக் கருதுகின்றது. குறிப்பாக, ஒரு ஆணும் பெண்ணும் சட்ட ரீதியாக திருமண பந்தத்தில் இணைந்து வாழ்வதை ஒழுக்கமாகக் கருதுகின்ற அதேவேளை மேற்கு தன்னினச் சேர்க்கை, பாலியல் சுதந்திரம், போதைப் பொருள் சுதந்திரம் போன்றவற்றை ஒழுக்கமாக கருதுகின்றது.

மேற்கினது ஒழுக்கமானது, மனிதனை இயந்திரமாக கருதி தேவைக்கேற்ப அவனிலிருந்து பிரயோசனம் அடைந்துவிட்டு பிறகு அவனை ஒதுக்கி விடுவதை ஒழுக்கமாக கருதிச் செயற்படுகின்றது. மனிதன் இவ்வுலகில் மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்ளக் கூடிய அனைத்து விடயங்களையும் செய்யலாம் என்பதுடன் வலியோனே அதிகாரத்திற்கும் ஆட்சிக்கும் தகுதியுடையவனாகக் கருதுகின்றது. ஆக, உலகாயுத நோக்கங்களை மாத்திரம் கொண்ட மேற்கினது மனிதன் தொடர்பான ஒழுக்கவியல் நகைப்புக்குரியதாக, கற்பனையாக அமைவதை ஆழ்ந்து வாசிக்கும் போது கண்டுகொள்ள முடியும். மறுபுறம், இஸ்லாமிய ஒழுக்கவியலானது இறைத்தூது, நிலையான தன்மை, இம்மை-மறுமை இலக்கு ஆகிய முப்பெரும் மூன்று நோக்கங்களில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்கத்தையோரினால் காலத்திற்குக் காலம் கூறப்பட்ட ஒழுக்கவியல் தொடர்பான கோட்பாடுகள் நிலைத்திருக்காமைக்கு இரு பிரதான காரணங்கள் அமைந்துள்ளன.

1. சீரான ஒழுக்கக் கோட்பாடு முன்வைக்கப்படாமை: குறித்த சிந்தனையாளர்கள் வாழ்ந்த காலத்தை பொறுத்து அவர்கள் ஒழுக்கவியலை வரையறுக்க முற்பட்டனர். அத்தோடு, அரசியல் தொடர்பான விடயங்களுக்கே அதிமுக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தன. மனிதனை வகுப்பு ரீதியாக பிரித்து அவனை லௌகீக விடயங்களுக்குள் உட்புகுத்தினர். இதனால் சீரான ஒழுக்கக் கோட்பாடு முன்வைக்க முடியாமல் போனது.

2. உளவியல் அடிப்படை காணப்படாமை: மனிதனை இயந்திரமாக கருதி செயற்பட்ட காரணத்தினால் அவனது உணர்வுகள் மதிக்கப்படவில்லை. சில சிந்தனையாளர்கள் உளவியலை கவனத்திற் கொண்டாலும் அதில் ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்தினர்.

மனிதன் தொடர்பாக பேசுகின்ற மேற்கினது ஒழுக்கக் கோட்பாடுகள் வெறும் தத்துவமாகவே காணப்படுகின்றன. தங்கள் சிந்தனை மூலம் உருவான கற்பனைகளை முன்னிறுத்தி இவ்வாறு இருந்தால் நன்றாக இருக்கும் என சிந்தித்துக் கூறிய, எழுதிய தத்துவங்களையே மேற்கத்தைய சிந்தனையாளர்கள் முன்மொழிந்தனர். அங்கு மதம், ஒழுக்கம், சட்டம் ஆகியன ஒன்றித்துப் போவதை அவதானிக்க முடியாது. மாறாக, இன்ப வாழ்வுக்காக, அரசியலுக்காக மனிதனை செயலாற்றத் தூண்டுவதாகவே அமைந்தன. இதற்கு முற்றிலும் புறம்பாக, இஸ்லாமிய ஒழுக்கவியல் சிந்தனைகள் வெறும் தத்துவமாக இல்லாமல் நடைமுறை வடிவம் சார்ந்ததாக அமைந்திருக்கின்றன. எக்காலத்திற்கும் பொருத்தமாக, எக்காலத்தவரும் பின்பற்றக் கூடிய அமைப்பில் உள இயல் கருத்திற் கொள்ளப்பட்டு கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தவகையில், மேற்கினது ஒழுக்கக் கோட்பாடுகளை மிஞ்சிய அமைப்பில் இஸ்லாமிய ஒழுக்க நடத்தைகள் சிறப்புற்று விளங்குவதற்கு சமநிலைத்தன்மை, நிறைவானது, வாழ்வின் அனைத்து கூறுகளையும் உள்ளடக்கியது, பொதுநலன் பேணியது, அனைத்து மக்களுக்குமான நலனை முதன்மைப்படுத்தியது, அகமும் புறமும் ஒன்றுபட்டது, பொதுப்படையானது, நீதமானது, தவறுகளை தவறாக கருதுதல், இயல்போடு ஒத்தது, நிலையானது, மாற்றத்திற்கு உட்படாதது ஆகியன பிரதான அம்சங்களாக காணப்படுகின்றன. மனித ஒழுக்கவியல் கோட்பாட்டின் அடிப்படை இறை சட்டம் என்பதற்கு இவை சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். மறுபுறம், பகுத்தறிவை மாத்திரம் வைத்துக்கொண்டு மனிதன் தொடர்பான ஒழுக்கத்தை வரையறுக்க மேற்கத்தையோர் முயற்சித்தது வெறும் நகைப்புக்குரிய விடயமாக வரலாற்றில் காணக்கிடைக்கின்றது. மேற்கூறப்பட்ட இஸ்லாமிய ஒழுக்க நடத்தைகளின் சிறப்புகளை மேற்கத்தையோரின் சிந்தனைகள் கைக்கொள்ளாத காரணத்தினால் அவை காலத்தால் விமர்சிக்கப்படுவதற்கு ஏதுவாக அமைந்திருந்தது எனலாம். இந்தவகையில் நோக்கும் போது, ஒழுக்கத்தை வரையறை செய்வதில் மனிதன் தொடர்பான மேற்கினது கருத்துக்கள் வெறுமையை காட்டுவதாகவே அமைகின்றது எனலாம்.

**முடிவுரை**

மேற்கினது ஒழுக்கவியல் கோட்பாடுகள் மனிதனால் மனித பகுத்தறிவாலும் சிந்தனையாலும் தோற்றுவிக்கப்பட்டதால் எந்தவொரு ஒழுக்கவியல் கோட்பாடும் வாழ்வியல் ரீதியான கோட்பாடாக செயற்பட்டு முழு மனித சமூகத்திற்கும் பொருத்தமானதொரு கோட்பாடாக உருவாகவில்லை. இதிலிருந்து இஸ்லாமிய கோட்பாடுகள் விதிவிலக்குப் பெறுகின்றது. ஏனெனில், இஸ்லாமிய ஒழுக்கங்கள் மனிதனை சிரு‘டித்த படைப்பாளனிடமிருந்து வழங்கப்பட்டவைகளாக உள்ளன என்பதே இன்றுவரை இஸ்லாமிய ஒழுக்கவியல் நிலைத்திருக்க காரணமாக அமைகின்றது. ஏனெனில், மனிதனது நடத்தைகளும், இயக்கங்களும், தொழிற்பாடுகளும் சிக்கலானவையாக இருப்பதால் அவற்றை முறையான கட்டுப்பாட்டுக்குள் அமைத்து நெறிப்படுத்த மார்க்கம், ஒழுக்கம், சட்டம் ஆகிய மூன்று இணைந்து தொழிற்பட வேண்டும். இம்மூன்றில் ஒன்றையோ அல்லது இரண்டையோ செயற்படுத்தினால் கூட அவ்வொழுக்கவியல் வெற்றி பெற முடியாது என்பது நிதர்சனமாகும்.

**உசாத்துணை**

அல்குர்ஆன் அல்கரீம்

அக்ரம், முஹம்மத். (2001). *நடைமுறைக்கேற்ற இஸ்லாம்.* பதிப்பு:2. பஸ்யால: முஸல்மான் பப்ளிகே‘ன்.

அனஸ், எம்.எஸ்.எம். (2006, அ). *மெய்யியல்: கிரேக்கம் முதல் தற்காலம் வரை.* கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

அனஸ், எம்.எஸ்.எம். (2003, ஆ). *மெய்யியல் அறிமுக உரைகள்.* பேராதனை: பண்பாட்டு வட்டம்.

இராதாகிருஷ்ணன். (1979). *கீழை மேலை நாடுகளில் மெய்ப்பொருளியல் வரலாறு*. இந்தியா: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

கஸ்ஸாலி, முஹம்மத். (2009). *இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள்*. மொழிபெயர்ப்பு: மு. குலாம் முஹம்மது. பதிப்பு:5. திருப்பூர்: திண்ணைத் தோழர்கள் பதிப்பகம்.

சிவானந்தமூர்த்தி. (2012). *ஒழுக்க நியமங்களும் அதன் நடைமுறைகளும்*. கொழும்பு: லங்கா புத்தகசாலை.

சுக்ரி, எம்.ஏ.எம். (1999). *இஸ்லாமிய வாழ்வியல் கோட்பாடுகள்*. பேருவளை: நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்.

நாராயணன், க. (2003). *அரசியல் சிற்பிகள்*. புதுச்சேரி: மாரி பதிப்பகம்.

மஸாஹிர், எஸ்.எம்.எம்., இஸ்மியா பேகம், எம்.எஸ். (2017). *இஸ்லாம் நம்பிக்கைகளும் கோட்பாடுகளும்*. கொழும்பு: அல்ஹஸனாத் வெளியீட்டகம்.

மௌதூதி, அபுல் அஃலா. (1989). *இஸ்லாமிய வாழ்க்கை முறை*. மொழிபெயர்ப்பு: கே.கே.எஸ். அப்துர் ரஹ்மான். பதிப்பு:5. சென்னை: இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்.

ஜமாஹிர், பீ.எம். (2012). *ஒழுக்கவியல் - ஓர் அறிமுகம்*. கண்டி: ஈஸ்வரன் புத்தகாலயம்.